(6 pages) **Reg. No. : ....................................**

**Code No. : 5200** **Sub. Code : ZTLM 14**

M.A. (CBCS) DEGREE EXAMINATION,
NOVEMBER 2022.

First Semester

தமிழ் – Core

அற இலக்கியம்

(For those who joined in July 2021 onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் சரியான விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. "அறம்" என்பதன் பொருள்

(அ) சிறப்பு (ஆ) ஒழுக்கம்

(இ) இயல்பு (ஈ) அழகு

2. அற இலக்கியத்தின் காலம்

(அ) 3-6 நூற்றாண்டுகள்

(ஆ) 6-7 நூற்றாண்டுகள்

(இ) 7-9 நூற்றாண்டுகள்

(ஈ) 9-11 நூற்றாண்டுகள்

3. திருவள்ளுவர் கூறும் நன்கலம்

(அ) குழந்தைப் பேறு (ஆ) செல்வம்

(இ) சிறந்த யாக்கை (ஈ) நன்னூல்கள்

4. திருவள்ளுவர் கூறும் அற்றம் காக்கும் கருவி

(அ) செல்வம்

(ஆ) அறிவு

(இ) சுற்றத்தார்

(ஈ) நண்பர்

5. "காலினீர் நீங்காமை யுண்டிடுக" என்று வலியுறுத்தும் நூல்

(அ) ஆசாரக்கோவை (ஆ) திரிகடுகம்

(இ) ஏலாதி (ஈ) இனியவை நாற்பது

6. விலங்கிற்குக் கூற்றமாக இருப்பது

(அ) திமில்

(ஆ) கொம்பு

(இ) வால்

(ஈ) கால்



Nesamony Memorial Christian College, Marthandam

7. வாக்குண்டாம் என்று அழைக்கப்பெறும் நூல்

(அ) நாலடியார் (ஆ) திருக்குறள்

(இ) மூதுரை (ஈ) முதுமொழிக்காஞ்சி

8. சங்கு சுட்டாலும் மேன்மை தரும் என்ற நூல்

(அ) மூதுரை

(ஆ) இன்னா நாற்பது

(இ) இனியவை நாற்பது

(ஈ) களவழி நாற்பது

9. வெற்றிவேற்கையின் ஆசிரியர்

(அ) கணிமேதாவியார் (ஆ) ஆதிவீரராம பாண்டியர்

(இ) ஔவையார் (ஈ) மதுரைக்கூடலூர் கிழார்

10. குணங்குடி மஸ்தான் சாகிபுவின் இயற்பெயர்

(அ) சுல்தான் அப்துல் காதிர்

(ஆ) முகமது அப்துல்

(இ) சுல்தான் முகமது

(ஈ) முகமது சுல்தான்



பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்களுக்குள் விடை தருக.

11. (அ) அறத்தின் இலக்கணம் கூறி, விளக்குக.

(அல்லது)

(ஆ) அறம் - வாழ்க்கை நெறியாதலை விவரிக்க.

12. (அ) வாழ்க்கைத் துணைநலம் குறித்து வள்ளுவம் கூறுவனவற்றை எழுதுக.

(அல்லது)

(ஆ) இன்னா நாற்பது கூறும் இன்னாதவற்றை எடுத்துரைக்க.

13. (அ) திரிகடுகம் வலியுறுத்தும் நற்சிந்தனைகளைக் கூறுக.

(அல்லது)

(ஆ) ஏலாதி தரும் அறக்கருத்துக்களை எடுத்துரைக்க.

14. (அ) முதுமொழிக் காஞ்சி கூறும் "சிறந்த பத்து"களைப் பட்டியலிடுக.

(அல்லது)

(ஆ) மூதுரை தரும் வாழ்வியல் செய்திகளைக் கூறுக.



*Nesamony Memorial Christian College, Marthandam*

15. (அ) வெற்றிவேற்கை கூறும் அழகுகளைப் பட்டியலிடுக.

(அல்லது)

(ஆ) செல்வம் நிலையில்லாதது என்பதைத் திருமூலர் பாடல்கள் வழி மெய்ப்பிக்க.

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 600 சொற்களுக்குள் விடை தருக.

16. (அ) அற இலக்கியத்தின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்துக் கட்டுரைக்க.

(அல்லது)

(ஆ) இலக்கியங்கள் வலியுறுத்தும் அறவியல் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

17. (அ) காலம் அறிதல் குறித்துத் திருவள்ளுவர் தரும் கருத்துக்களைக் கட்டுரைக்க.

(அல்லது)

(ஆ) நான்மணிக்கடிகை வெளிப்படுத்தும் அறக்கருத்துக்களை எடுத்துரைக்க.

18. (அ) பழமொழி நானூறு கூறும் வாழ்வியல் செய்திகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) சிறுபஞ்சமூலம் வலியுறுத்தும் கருத்துக்களைக் விவரிக்க.



19. (அ) நல்வழி வலியுறுத்தும் வாழ்வியல் சிந்தனைகளைக் கட்டுரைக்க.

(அல்லது)

(ஆ) பாரதிதாசனின் ஆத்திசூடி தரும் கருத்துக்களைக் கட்டுரைக்க.

20. (அ) யாக்கை நிலையாமை குறித்த திருமூலரின் கருத்துக்களை விவரிக்க.

(அல்லது)

(ஆ) பராபரக்கண்ணி வெளிப்படுத்தும் இறைச்சிந்தனையை எடுத்துரைக்க.

———————



Nesamony Memorial Christian College, Marthandam